| அசல் வழக்கு எண். 154/2019 | | பி. சா .1 | தேதி.7.12.2022 |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. வள்ளியம்மாள் | வயது | 47 |
| த/பெ. | திரு. சுப்பையன் | முகவரி | முத்துக்கல்லூர் |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |
| கிராமம் | | தொழில் | |

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. 486/1 ல் 80 செண்ட்ஐ எப்பொழுது வாங்கினோம் என்றால் 15.7.2002 அன்று 94 செண்ட்ஐ வாங்கினேன். நான் சொத்தை வாங்கிய பொழுது சுவாமிநாதன் என்ன சுவாதீனம் கொடுத்தாரோ அந்த அளவிற்குதான் நான் இன்றைய தேதியிலும் சுவாதீனத்தில் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். அந்த புல எண்ணில் மொத்தமாக 2 ஏக்கர் 95 செண்ட் நிலம் சாமிநாதனுக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். எனக்கு விற்ற நிலம் போக மீதி நிலத்தில் சுவாமிநாதன்தான் சுவாதீனத்தில் இருந்தார் என்றால் சரிதான். நான் நிலத்தை வாங்கிய பிறகு நான் உட்பிரிவு செய்து தனிப்பட்டா வாங்கவில்லை. எனக்கு விற்ற நிலம் போக மீதி நிலத்தை சுவாமிநாதன் எப்பொழுது விற்றார் என்றால் 2018 ல் வரதராஜனுக்கு விற்றுள்ளார். 6.2.2013 ல் மீதி நிலத்தை சுவாமிநாதன் சுப்ரமணிக்கு விற்று விட்டதாக நான் எனது வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றால் நான் அப்படி சொல்லவில்லை.

2. சுப்ரமணி நிலத்தை வாங்கி விவசாயம் செய்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சுப்ரமணி விவசாயமே செய்யவில்லை. சுப்ரமணி பவர் மட்டும்தான் வாங்கிக்கொண்டு போனார். சுப்ரமணி யார் பெயருக்கு பவர் வாங்கினாரென்று எனக்கு தெரியாது. சுப்ரமணி கிரையம் வாங்கிய ஆவணத்தை நான் கோர்ட்டில் 4-வது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் அவ்வாறு தாக்கல் செய்து விட்டு உண்மை சங்கதிகள் தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லையென பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சுப்ரமணி விலைக்கு வாங்கிய வா சா ஆ 4 விலையாவணத்தில் எனக்கு விற்பனை செய்த 80 செண்ட் போக மீதி நிலத்தை சுப்ரமணிக்கு விற்பதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா சா ஆ 4 ஆவணத்தில் செக்குபந்தியில் வள்ளியம்மாள் கிரையம் பெற்ற 0.80 செண்ட் நிலத்திற்கு கிழக்காக என உரைக்கப்பட்டுள்ளது என்றால் சரிய ல்ல.

3. வா சா ஆ 4 ஆவணம் தவறானது எனச்சொல்லி நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. பவர் பத்திரம் மூலமாகதான் சுப்ரமணி கிரையம் பெற்றார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த பவர் பத்திரத்திலும் இதே செக்குபந்திதான் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனக்கு விற்றது போக மீதி நிலத்தை தான் சுவாமிநாதன் சுப்ரமணிக்கு விற்று சுப்ரமணியம் வரதராஜனுக்கு விற்று வரதராஜன் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். இடைக்கால தடை உத்தரவு கேட்ட வழக்கிடை எண்3/2020 ல் சாமிநாதன் அளித்த சாட்சியத்தில் 486/1 ல் 80 செண்ட் நிலத்தைதான் சாமிநாதன் எனக்கு விற்றதாகவும் மீதி நிலத்தை ஏமாற்றி எழுதிக்கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. 80 செண்ட் பூமியை மட்டும் நான் விலை கொடுத்து வாங்கிவிட்டு சாமிநாதனை ஏமாற்றி 94 செண்ட் என பத்திரத்தில் எழுதி ஆவணத்தை ஏற்படுத்தி அதை அடிப்படையாகக்கொண்டு தற்பொழுது சுவாதீனத்தை கேட்டு பிரதிவாதிகளுக்கெதிராக ஒரு தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. பிரதிவாதி நிலத்தை வாங்கிய பிறகு அவரது நிலத்திற்கு முத்தாளம்மன் கோயிலிருந்து வரும் வழியை தடுத்து பிரச்சினை செய்தோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு 307/2018 ஐ தாக்கல் செய்து அவரது வழித்தடத்தை நான் தடை செய்யக்கூடாதென தடை உத்தரவு வாங்கி உள்ளார் என்றால் அந்த இடத்தில் தடம் இல்லை. நீதிமன்ற ஆணையர் அந்த இடத்தை பார்த்து விட்டு தடம் இருப்பதாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த ரிப்போர்ட்டை என்னிடம் கொடுக்கவேயில்லை. நீதிமன்ற ஆணையர் இடத்தை வந்து பார்த்து சென்ற பிறகு 486/1 இடம் ஆரம்பிக்கக்கூடிய இடத்திலும் முத்தாளம்மன் கோயிலிலிருந்து வரக்கூடிய இடத்திலும் இரண்டு இரும்பு நுழைவாயில்களை அமைத்தேன் என்றால் சரிதான். என்னுடைய பூமியில் அமைத்தேன். நுழைவாயில் அமைத்த இடம் எனக்கு சொந்தமான பூமி இல்லை என்றும் அது பொது தடம் என்றும் சொன்னால் சரியல்ல.

5. அந்த தடத்தை பிரதிவாதி உபயோகிப்பதை தடுக்கக்கூடாதென நீதிமன்ற உத்தரவு இருந்தும் அதை மதிக்காமல் தடுத்து கேட் போட்டு விட்டேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் நான் 4 ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு நான் ஒரு எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பதிலுரை இதுதானா என்றால் ஆமாம். அந்த பதிலுரை பி சா ஆ. 1. அந்த பதில் தாக்கல் செய்வதற்கு வக்கீலுக்கு நான்தான் விபரங்கள் சொன்னேன் என்றால் சரிதான். அந்த பதிலுரையில் " **அதேபோல் இவ்வழக்கின் 4 ம் பிரதிவாதி வள்ளியம்மாள் வாதிகள் கிரையம் பெற்ற பூமிகளில் மூதாதையரான சாமிநாதன், ரஞ்சித்குமார் மற்றும் ராதா ஆகியோரிடமிருந்து கடந்த 15.07.2002 ம்**

**தேதியில் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரைய பத்திர ஆவணம் 3287/2002 ன்படி க.ச. எண். 486/1 உள்ள பூமியின் மேபுற கோட்டில் உள்ள 0.80 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள பூமியினை விலைக்கு வாங்கினார்"** என சொல்லப்பட்டுள்ளது என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. பி சா ஆ 1 ஆவணத்தில் கடைசி பக்கத்தில் வள்ளிய ம்மாள் என கையெழுத்து யாருடையது என்றால் அது என்னுடையது தான்.

6. இந்த பிரதிவாதி இல்லாமல் அந்த சுற்று வட்டாரத்திலுள்ள விவசாயிகளுக்கெதிராக பல வழக்குகள் போட்டுள்ளேன் என்றால் பிரச்சினை செய்தவர்கள் மீது கேஸ் போட்டுள்ளேன். அங்குள்ள விவசாயிகளை துன்புறுத்தவேண்டும் என்பதற்காக அவர்கள் மீது வழக்கு போடுவதே என்னுடைய வாடிக்கையாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் 80 செண்ட் பூமியை வாங்கிய காரணத்தால்தான் உட்பிரிவிக்கு விண்ணப்பித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால்தான் இதுநாள்வரை உட்பிரிவிற்கு நான் விண்ணப்பிக்காமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. சுப்ரமணியின் பூமியை நான் குறைவான விலைக்கு கேட்டு அவர் கொடுக்க மறுத்ததாலும் பிரதிவாதி அவரிடம் சொத்தை வாங்கியதாலும் அவரை தொல்லை செய்ய வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. 2013 ம் ஆண்டு சுப்ரமணிக்கு சாமிநாதன் விற்ற அளவு தெரிந்தும் இதுநாள் வரையில் வழக்கு தாக்கல் செய்யாமல் பிரதிவாதிக்கெதிராக தாமதமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

P K SIVAKUMAR

Digitally signed by P K SIVAKUMAR
Date: 2022.12.07 18:12:04 +0530

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.